# திறவுகோல்

2052 ஆடி
மாத இதழ்



5ஆம்
ஆண்டின்
முதல் மாத
மின்னிதழ்

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு சேல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# "மேதகு" திரைப்படம் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் பேராதரவை பெற்றுள்ளது.

பலத்த எதிர்பார்ப்புகளுடன் சமீபத்தில் OTT தளத்தில் வெளியான "மேதகு" திரைப்படம் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் பேராதரவை பெற்றுள்ளது. தமிழீழ தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களின் ஆரம்ப கால போராட்டங்களை ஆவணப்படுத்தும் முயற்சியில், இயக்குனர் கிட்டு அவர்களின் இயக்கத்தில் வெளியான இத்திரைப்படம் பிரான்ஸ் மற்றும் டென்மார்க் நாடுகளில் திரையரங்குகளில் வெளியாகி சிறப்பான ஆதரவை பெற்றுள்ளது.

இதன் தொடர்ச்சியாக அமெரிக்க வாழ் தமிழ் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப அமெரிக்க ஒன்றியத்தில் உள்ள அட்லாண்டா மாநகரில் அட்லாண்டா தமிழர் பேரவை என்ற தமிழ் அமைப்பின் ஏற்பாட்டில் திரையரங்குகளில் சிறப்பு காட்சியாக திரையிடப்படுகிறது.







தமிழர்கள் மட்டுமில்லாமல், அனைத்து மக்களும் கண்டிப்பாக காணும் வண்ணம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமல்லாமல் கனக்டிகட் மாகாண தமிழர்களின் முன்னெடுப்பில் காட்போர்ட் நகரிலும் திரையரங்கில் திரையிடப்பட உள்ளது.

இந்திய ஒன்றியத்தில் திரையரங்குகளில் திரையிட இயலாத சூழலில் உலகெங்கும் திரையிடப்பட்டு பெருவாரியான மக்களை இத்திரைப்படம் சென்றடைவது உலகெங்கிலும் உள்ள தமிழ் உணர்வாளர்களால் பெரிதும் கொண்டாடப்படுகிறது.

–

கோபிநாதன்,
அமெரிக்கா

# மனிதர்கள் கூடி

ஆனந்த கொண்டாட்டம்...
அவர்களுக்கு பின்னே
அமைதியாய் கொரோனா...!

நாள் முழுதும்
உழைப்பு...
ஒரு சொட்டு
வியர்வையில்லை..
கடிகாரம்...!

அடிவிழ அடிவிழ
அதிரும் பறை..
புறக்கணிக்கப்பட்ட
கோபம்...!

சாகவேயில்லை
மதச் சண்டையில்...
மதம் மட்டும்....!

இருண்ட கிராமம்
கடந்து செல்கின்றன
நகருக்கு -
மின் கம்பிகள்....!

அமைச்சரின்
கருப்புப் பணம்
பச்சையாயின
நடிகையிடம்....!

உயர உயர
சென்றன பறவைகள்..
தலை குனிந்து
பறந்ததால்....!

பத்திரிக்கையின்
ஒரே பக்கத்தில்
பிறந்த நாள் வாழ்த்தும்
கண்ணீர் அஞ்சலியும்...
நிஜ வாழ்க்கை.....!

முட்டையிடாமல்....
கொக்கரிக்கின்றன..
கோழிகள்..!
படைப்பு விமர்சனம்.....!

சூரியன்
வரைந்தது...
நிழலாய் என்னை...!

மரம்
மொட்டைபோட்டது...
வேண்டுதல் காலம்...!

வெள்ளை ரோஜா
ஏக்கம் தீர்ந்தது....
சுமங்கலி தலையில்.....!

- முனைவர் சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.



## 1.காலணி எழுதிய குறிப்புகள்

படைக்கப்பட்ட மனிதன்
ஏனோ சபிக்கப்பட்டும் விட்டான்
அவன் காலணியில் புதைந்திருக்கும்
துன்பங்களில் துயில்கொள்கிறான்
மருத்துவமனைக்குச் சென்று வந்த
குறிப்புகள்
கடைக்குச் சென்று அதன் அடியில்
மிதிப்பட்டுப் போன சில தக்காளியின்
குமுறல்கள்
அவமானத்தின் அடையாளங்கள்
நிறைய இருந்தும்
பேசாமல் அமைதி காத்தது அவன்
காலணி
அவன் கோவிலுக்குச் சென்று வந்த
குறிப்புகளில் அவன்
நம்பிக்கையிருந்தது
ஆனால் தெய்வத்தைப்பற்றி ஒரு
வார்த்தை கூட இல்லை
இரவில் அவன் நண்பனோடு அமர்ந்து
மது அருந்திய குறிப்புகளில்
நிறைய இன்பத்தின் பக்கங்கள்
நிறைய மனிதர்களின் வடுக்களைச்
சுமந்து வந்த காலணி
மனதைவிடப் பத்திரப்படுத்தியுள்ளது
அதன் பயணங்களை
என் மகளின் காலணியை
புத்துயிர்ப்பாய் வைக்கப்
பிரியப்பட்டேன்
ரெனே மாக்ரிட்டின் ஓவியங்களை
அவளிடம்
அறிமுகப்படுத்தினேன்
அவள் அடிக்கடி காலணியை
மாற்றிக்கொண்டேயிருந்தாள்.

***

## 2.அறிவிப்பு

சில நேரம் தானாகவே
விலகிக்கொள்கிறது மனது
இந்த பசுமையான மரங்கள் கூட
பாலைவனமாக மாறிவிட்டது போல்
உணர்வு
சில நேரம் உப்பு காற்றில்
உரையாடிவிட்டு ஏக்கத்தோடு
திரும்புவது வழக்கம்
சில நாட்களாக அதுவும் இல்லை
அங்குள்ள கரும் பாறைகள்
என் அமர்விற்காக ஏங்குவது போல்
பாவனைச் செய்து அதனிடம் அமர்ந்து
பேசியது உண்டு
இந்த மனித வர்க்கத்திற்கு மட்டும்
இத்தனை ஆசுவாசங்கள்
தேவைப்படுகிறது
அது மரணத்திற்கும் வாழ்க்கைக்கும்
இடையில் எதையோ எழுதியபடி
ஓடிக்கொண்டிருக்கும்
தத்துவங்களையும்
கருத்துகளையும்
அறிவுரைகளையும்
தாண்டிச்செல்லவே எண்ணுகிறது
மனது
இருந்தாலும் நானும் எழுதுகிறேன்
தொடர்ச்சியான மலைகளிலும்
பெரும் பாறைகளிலும்
நீளமான நதிகளிலும்
என் அறிவிப்புகள் அமைதியாக
ஓடிக்கொண்டிருக்கிறது
அது கடலிலும்
காடுகளிலும் கலந்து நடனமிடக்
காத்திருக்கிறேன்
மரணத்திற்காக மனம் அமைதியாக
மனிதனிடம் சண்டையிட்டு
காயப்படுத்திக்கொண்டேயிருக்கிறது

அதைத்தாண்டி ஆழ்ந்த இருப்பில்
என் அறிவிப்புகள் பயணப்படுகிறது.

***

## 3. திரும்பிய பக்கமெல்லாம்
அழைப்பு வருவதால்
குழம்பிப்போகின்றன
காகங்கள்
காகம் தேடுகிறது
அமைதியை.

***

## 4. தினம்
இதுவே கடைசி
எனக் காத்திருக்கும்
நேரத்தில்
மீண்டும் நிலவின்
வெளிச்சம் நழுவி
காயத்தைத் தள்ளுகிறது
எலும்பு நழுவி
நீந்துகிறது
உதிர்ந்த இலையைப்போல
இந்த கரை இத்தனை
வேதனையைச் சுமக்கிறது.

***

## 5.உனக்கும் எனக்குமான இந்த
ஒப்பந்தத்தில் நழுவுகிறது
இந்த கல்
நம் பிரார்த்தனைகளைக்
கேட்டுக்கொண்டே
அதன் பெயரற்ற நிலையில்
அந்தக் கல் மீது அமரலாம்
அதை இடம் பெயரச் செய்யலாம்
வலியைப் பொறுத்துக் கொண்டே
தனி அறையில் வெறுப்பு
அதன் உளி வலிகளைப்பற்றி
ஒரு நாளும் யாரும் கேட்டதில்லை
அந்தக் கல்லுக்குப் பிடிக்காத பாடல்
பிடிக்காத பால்
பிடிக்காத மனிதர்களை ஏக்கத்துடன்
பார்த்தது
கதவைத் திறந்திருக்கும் பொழுது
வரும் காற்று
பெய்யும் மழை
தெரியும் வானம்
எனப் பழைய நிலைக்கு மாற
நினைக்கும் கல்லைப்பார்த்து
அழைக்கிறது பிரபஞ்சம்
புதிய நிலைக்குச் செல்வதாக
தவித்துக் கொண்டே நடக்கும்
மனிதர்களுக்குள்
வெளிச்சமே பார்த்தறியாத
இருட்டறையே மூலஸ்தானம்
அதிலிருந்து வெளியேறுகிறது
பதற்றத்துடன் பாடல்.

***

## 6. மரணத்தில் துளிர்விடும்
மண்டையோடுகளின் அலறலில்
அவிழ்கிறது வாழ்ந்து முடித்த
எச்சங்கள்
கானல் நீரின் மேல்
சிறிது கண்ணீர் ததும்புகிறது
நெஞ்சில் ஈரத்துடன்
பிணத்தைச் சுற்றிய ஈமச்சடங்குகள்
எலும்பை அரித்துச் செரிக்கும்
மண்ணிற்கும் அதிகாரத்திற்கும்
தொடர்பை ஏற்படுத்தி
நடுங்கச்செய்கிறது நிலம்
மரணித்தலில் ஒரு விதை

உயிர்பெறுகிறது
மரணித்தலில் மனித உடல் எங்கு
மீண்டும் ஜீவிக்கிறது
ஞானத்திற்கும் மரணம் உண்டு
தியானத்திற்கும் மரணம் உண்டு
வாழ்க்கை சங்கிலியின் தொடர் ஓட்டமே
மரணத்தை எதிர் முனையில் இழுத்து
விளையாடுவதுதான்
மரணித்துப்போன படிமங்களின்
கார்பன் ஐசோடோப்புகளின் நிழலில்
இளைப்பாற மண் அழைக்கிறது
பழைய கால நினைவுகளை
அசைபோட வைத்து
நடப்பு திசையை இழுத்துச் செல்கிறது
மண்
எச்சங்களால் நிரம்பிய மண்ணிற்கு
முத்தங்களால் நிரம்பும் அளவிற்கு
மண்ணில் ஏற்புடைந்து சிதறும்
உயிர் குரலின் ஆழத்தில்
ஓர் தீவிரம்
கால் தடங்களின் புணர்ச்சியில்
உயிர் பெறும் மண்ணை
ஆதி அணு அசைத்துப்பார்த்த
லௌகீகம் திகைப்படையச் செய்து
கொண்டே இடம்பெயர்கிறது கோளம்.

***

## 7. தொலைதலில் இன்பம்

தொலைந்து போகலாமென
சில கிலோமீட்டர் தூரமுள்ள
வனத்திற்குச் சென்றேன்
மனிதனைக் கொலைகாரனென
அழைத்தது மரம்
ஆம் பச்சை ரத்தம் குடிக்கும்
அரக்கக் குணமே மனிதனென்றாள்
வனயட்சி
அவள் அழகின் ரீங்காரத்தில்
வனயட்சனாக தொலைந்து போனேன்
வன இலைகள் காற்றை மீட்கும்
லயத்தில் ஓர் ஈர்ப்பில் கலந்தேன்
ஆதி மரத்தின் வேர்களில் ஒட்டியிருந்த
ஆதிமண்ணின் உருவம் மாறாத
அன்பின் ஒளி வனமெங்கும்
அங்கு ஆதியில் பிறந்த
விதையொன்றின்
தொடர்ச்சியில் அலறியது
மனிதனைப் பார்த்த
காட்டு மிருகமொன்று
வேட்டை ஆர்வம் இரண்டு சிவப்பு
மிருகத்திற்குள்ளும் அலறியது
சிவப்பு ரத்தத்தைப் பச்சை ரத்தத்தோடு
சேர்த்துக் குடித்தான் மனிதன்
காடு
மலை
சமவெளி
பள்ளத்தாக்கு
என வேட்டையாடிய மனிதன்
வேற்று கிரகத்தையும்
வேட்டையாடுவதை
பார்த்து அலறியது காடு
தேடலுள்ள மிருகத்தின் குரலாய்
மனிதன்
தேடலற்ற அமைதியில்
காட்டுச்சுதந்திரம்
அலறிக்கொண்டேயிருக்கிறது
நான் வனயட்சியோடு தொலைந்து
போனேன்
அதன் நீட்சியில் எந்த சொல்லைக்
கொண்டும் நீங்கள் நிரப்பலாம்
காமம்
தியானம்
காடு
புத்தகம்

நண்பன்
பாடல்
கடல்
பூ
இப்படித் தொலைவதற்கு ஏதாவது
ஒன்று தேவைப்படுகிறது.

***

## 8. காற்றின் பயணம்

மண்ணை புணர்ந்து
விதையும் உடைந்து
நீரை உறிஞ்சி
பூத்துக்கிடக்கிறது இலைகள்
பிராணவாயுவின்
கலப்பில் காற்றுப்பாசியின்
திணறல்கள்
பிரிந்த காற்று நழுவி
மனிதனைத் தேடுகிறது
மறு பாதி மரத்தைத் தேடுகிறது
உள்ளத்தில் தாமரை அளவு
மலர்ந்து விரிகிறது காற்று
உடலில் குளித்து
உயிர் பூக்கும் மௌன குரலாய்
காற்று கடலை கடக்கிறது உடல்
காற்றிலுள்ள மூலக்கூறுகளின்
சாயலே உயிர்
உயிரின் சாயல்
பிராணன்
கபால நதியில்
காற்றின் துடிப்பாய்
உயிரின் பயணம்
காற்றுக்கடலில் உயிரின்
பிறப்பு.

***

## 9. விரும்புகிறோமோ

இல்லையோ
தூக்கம்
ஆழ்ந்த மவுனத்தைத்
தந்துவிடுகிறது நமக்கு
தூக்கத்தில் எழும் மவுனம்
பகலிலும்
இரவிலும்
வேறொரு மவுனத்தை
ஆழமாக
அசைத்துப்பார்க்கிறது
அழைப்பேதும் இல்லாமல்.

***

## 10. மரண விலாசம்

மரணத்தைத் தவிர
இந்த பூமியில்
நிலையாக அடைய
ஒன்றுமில்லை
ஆமாம்...
சொர்க்கம்
நரகம்
மரணத்தின் முகவரி
என எழுதப்பட்டிருக்கிறதே
சொல்லப்பட்டிருக்கிறதே
காட்டப்படவில்லை...
நான் கடவுள் என்கிறார் ஒருவர்
மரண விலாசம் தெரியாமலேயே
கொஞ்சம் வி(தை)ந்து
கருமுட்டையில் விலாசம் அமைத்து
மரணிக்கத் தொடங்குகிறது எல்லாமும்
நமக்குத் தெரிந்த
மரண விலாசம்
இந்த உடல் தான்
உயிர் பிரியும் இடமெல்லாம்

சுடுகாடுதான்
பூமியின் ஒவ்வொரு துகளும்
சவத்தைத் துளிர்க்கச் செய்யும்
முயற்சியில் தோற்கிறது.

***

## 11. பெண் எனும் கடல்

பெண்களைப் புரிந்து
கொள்ளமுடியவில்லை
என்கிறான் ஆண்
ஒரு பெண் அவ்வாறு
சொல்லியதே இல்லை
அழகானதொரு ஆணின்
இணக்கத்தை ரசிப்பதால்தான்
இந்தளவு வாழ்வு நீள்கிறது
பெண் எனும் கடலின் முன்
அமர்ந்து ரசி
அவள் அழகான அலையைப்போல்
நீண்டு செல்கிறாள்
அந்த அலை எழுதிச்செல்லும்
ஆயிரம் ஆயிரம்
வரிகளை மௌனமாகப்படி
மௌனமாக ரசி.

***

12.இந்த இரவிற்கு மட்டும்
ஒரே பாதை
அந்தப் பாதையில்
தீபம் அழகாக
பயணிக்கிறது
பகலில் தீபத்திற்கு ஏது பாதை
எதற்குப்பாதை
நீ இரவா
பகலா
பித்தனுக்கு இரவு பிடிக்கும்.

--

ப.தனஞ்ஜெயன்,
9751800333



**நிவேதிதா இராசகோபால்,**
**நான்காம் வகுப்பு,**
**பரவாக்கோட்டை.**

# குண்டா பொக்கிசம்

வாரம் ஒரு முறை வாங்கி வரப்படும் சட்னியோடு கூடிய இரண்டு வாழைக்காய் பஜ்ஜி. மற்றபடி வார நாட்களில்... அன்னம்மாக்கா கடை தட்டு முறுக்கு... இளந்தப்பழம்... மாகாளி பாட்டி மரத்து கோணப்புளியங்காய்... எப்பவாவது வந்து போற தள்ளுவண்டி சோன் பப்பிடி...... பாலமுருகன் தியேட்டர் முன்னால் இரவானால் வந்து நிற்கும் தள்ளுவண்டி தேங்காய் பால். இதைத் தாண்டி பெரும்பாலும் தின்பண்டம் என்றால் அது பொரி கடலை தான்.

"திங்கறதுக்கு ஒண்ணுல்லயா....."

வாய்க்குள் சுழலும் வெறுமையை மெல்ல மெல்லும் போது..... பாட்டி அர்த்தத்தோடு பார்க்கும். கொஞ்சம் இரு ...என்பது...போல திரும்பி வீட்டுக்குள் செல்லும். பத்து பதினைந்து நிமிடத்தில் திண்ணையில் அமர்ந்திருக்கும் என்னிடம் ஒரு குண்டா பொரியை  நீட்டும்.

வெறும் பொரி கடலை என்றால் என்னவோ மாதிரி இருக்கும். ஆனால்.. பாட்டி திங்கள் கிழமை சந்தையில் வாங்கிய... பொரியை சட்டியில் போட்டு தேங்காய் எண்ணெய் ஊற்றி...... வெங்காயம் நறுக்கி போட்டு... கொஞ்சம் மிளகாய் பொடி போட்டு... கொஞ்சமாக நிலக்கடலையும் போட்டு... நாலு பிரட்டு பிரட்டி.. அப்படியே எடுத்து குண்டாவில் கொட்டியிருக்கும். சட்டென கூடி விட்ட கமகமக்கும் பொரியை பார்க்கும் போதே குண்டாவுக்குள் பொரி கலகலக்கும். சற்று முன் இருந்த சாதா பொரி ஜிவ்வென்று மாறி போவதை நாவூர பார்த்த காலத்தை அசை போடுகிறேன்.

எண்ணெய் கலந்த மிளகாய் பொடியும்... வாயொட்டும் தேங்காய் எண்ணெய்யும்...... ஒவ்வொரு நறுக்கிலும்... நா பர பரக்க செய்யும் வெங்காயமும்......  பொரியை வரி வரியான பிறையாக்கி குவித்திருக்கும்...குண்டா.

பேச்சு பேச்சாக இருக்கும் போதே கை குண்டாவுக்குள் போய் போய் வரும் எனக்கும் ரவி அண்ணனுக்கும். சுபாஸோடு கடந்த ஒரு வாரமிருந்த சண்டை கூட ஒரு கைப்பிடி எண்ணெய் பொரியில் சரி ஆகி இருக்கிறது. நாவில் மிளகாய் காரம் ஸ்ஸ்ஸ் ஸ்ஸ்ஸ்ஸ் என்று சுவை கூட்டிக் கொண்டே செல்லும். வெங்காய கடியில் கலங்கும் கண்கள் சப்புக் கொட்டும் போது சமாதானமாகும்.

ஒரு கட்டத்தில் பேச்சை மறந்து மூச்சில் கார நெடி ஏற... வாய் மெல்லும் பொரியில் கூடுதல் கவனம் சேர்ந்திருக்கும். வாயில் ஏறும் ஸ்ஸ்...... ஸ்ஸ்...... சப்தம்.... கூர்ந்த

பார்வையில்.... எதிரே பேசுவோருக்கு ம்ம்ம் கொட்டும். பொரி தின்னுதல் ஒரு வேலை. ஒளிவு மறைவின்றி பொதுவெளியில் நிகழும் ஒரு கலை.

"என்ன விஜியா.....ஒண்ணுமில்லன்னு பாட்டி பொரிய கலக்கி குடுத்துருக்கா" என்றபடியே போகிற போக்கில் கையை குண்டாவுக்குள் விட்டு ஒரு கொத்து அள்ளி வாய்க்குள் போட்டு போகும் பத்மினிக்கா. திரும்பி வருவதற்குள் முடித்து விட வேண்டும் என்று மனம் பதறும்.

குண்டா பொரி முடியும் போது அதுவரை கொஞ்சம் கொஞ்சமாக ஏறி இருந்த காரம் தேங்காய் எண்ணெய் வாசத்தோடு முகமெல்லாம் நிரம்பி இருப்பது போன்று தோன்றும். இனி அடுத்த நாள் வரை திங்கிறதுக்கு ஒன்னும் வேண்டாம் என்பது போல ஒரு திருப்தி உடலில்.... கலந்திருக்கும்.

பொரி கடலை ஒரு சுவை என்றால் மேற்சொன்ன கலவை வேறொரு சுவை. சுவை உணர்தல்... நாகரிக நுட்பம். பொரி தின்னும் வாய் பொறிக்குள் மாட்டிக் கொண்டிருக்கிறது எனலாம். பொரி சாப்பிட தொடங்கி பொரி காலியாகாமல் நிறுத்திய மனிதன் யார். செய்யும் வேலை செய்தபடி இருக்க... ஓர் அனிச்சை செயலைப் போல பொரியை அள்ளி அள்ளி வாய்க்குள் நிரப்புவது ஒரு வித உடன் இயக்கும். யானைப்பசிக்கு சோளப்பொரி என்பது போல... பொரி தின்னும் ஒவ்வொரு வயிறிலும் ஒரு யானை வாய் இருப்பதை உணர முடியும்.

நேந்திர சிப்ஸ்களிடம் இருந்து வெகு தூரம் சென்று விட்ட ஒரு கால கட்டத்தில்.... தேங்காய் எண்ணெய் காரப்பொரி என் ஏக்கம் போக்கி. இன்றும் பொறி உண்ணும் நாட்களில் புருவம் வரை வந்து போகும் பிசுபிசுக்கும் கார நெடியை பத்திரமாக வைத்திருக்கிறேன். அது எழுதி விட்டதை விடவும் என்னிடமிருக்கும் குண்டா பொக்கிஷம்.

–
**கவிஜி**



அட்டைப்பட ஓவியம்:

**இரா.மதுவர்ஷினி,**

சரஸ்வதி வித்யாலயா பள்ளி,
பெருவிடைமருதூர்.

# முள்ளுக்கு பலத்த காயம்...

விற்புருவங்களைச் சுருக்கி
கயற்விழிப் பார்வையால்
சுண்டியிழுத்து
கோவைக் கனியிதழைச்
சுழித்து முடிக்கிறாள்.
இவையத்தனையும்
நிகழ்ந்து முடிந்த ஒற்றை
நொடியில்...
தீப்பற்றிக்கொண்டது
என் அடிமனதில்...!
/
மண்ணுக்கும் வேர்களுக்கும்
உறவுப் பாலமிடும்
தண்ணீர்.
/
பிரபஞ்சம் அணிந்த
நெற்றிப் பொட்டு இவ்வுலகுக்கே
வெளிச்சம் தருகிறது.
/
விழிகளில் வழியும்
கபடமற்ற காதலுக்கு
அன்பின் பரிசாய்
இதயத்தைத் தருகிறேன்.
/
இமைகளை மூடி
உறங்க விடாமல் செய்யும்
சித்து விளையாட்டுக்கு;
காதலென்று பெயர்.
/
பதில் அல்லாத ஒன்றுக்கு
பரிசாய்த் தருகிறேன்
ஆகச்சிறந்த மௌனம்.
/
அன்பைப் பொழியவே
யோசிக்கிறாய்.
ஆசையோடு முத்தங்கள்
தருவாயென்பது
நம்பும்படி இல்லை.
/
கனவில்...
ரோஜாவின் மீது விழுந்த
முள்ளுக்கு பலத்த காயம்.
/
பிரபஞ்ச கருப்பை
உடைந்து வெளிவந்தது
ஒளி முட்டை.
/
ஏழைச் சிறுமி பசியோடு
வரைந்த ஓவியத்தில்
கொழுத்திருக்கிறது பூனை.
/
இரவுத் தூக்கமின்றி
படுக்கையில்
புரண்டுக் கொண்டிருக்கிறாய்.
உன் கூந்தல் மடியில்
தலைச்சாய்த்த மகிழ்வில்
நிம்மதியாய்
உறங்கிக் கொண்டிருக்கிறது
உன் தலையணை.
/
உன் கேள்விகளுக்கு
என்னிடம் பதிலிருக்குமென்று
தொடுக்கிறாய்
கேள்விக் கணைகளை.
உன்னைப் போல் பலர்
தொடுத்த கேள்விக் கணைகள்
என்னிடம் குவிந்து கிடக்கிறது
மலையாய்.
/
நீர்ப்பார்க்க
ஆசையெனில்

மரங்கள் வை.
/
தூங்காமலிருந்த
இரவு முழுவதும்
உந்தன் ஞாபகம்.
/
யாரும் காணா வண்ணம்
மண்ணுக்குள் மறைத்திருக்கிறது
வேர்க்குறியை மரங்கள்.
/
தனக்குத் தேவையென்று
எதையும் எடுத்து வைப்பதில்லை
மரங்கள்.
/
தனிமையில்
பேசிக் கொள்கிறது
யாருமற்ற அறையில் பல்லி.
/
ஆறஆற
ஆடையுடுத்துகிறது
காய்ச்சிய பால்.
/
தேவையென்று
சல்லடையில் அள்ளிய நீர்
கணநேரம் கூட தங்கவில்லை.
/
நீதிக்குப் பின்
பாசம்
முன் கடமை.
/
மனதிற்குக் கடிவாளம் போடாதவன்
ஓடி ஓடி போடுகிறான்
காலிமனைகளுக்கு வேலி!
/
அருகில் யாருமில்லை
எனினும் ருசிபடவில்லை
தனிமை.
/
வலைபின்னியது சிலந்தி
அதன் வசமில்லை
நூலுருண்டை.
/
திருப்திபடி எல்லாமும்
அமைந்திட இருக்காது
வாழ்க்கையில் சுவை.
/
வீட்டையே சுற்றுகிறது
ஒற்றைப் பருக்கைக்கு
எறும்பு.
/
திரும்பத் திரும்பச்
சொன்னாலும்
உண்மையாகாது பொய்.
/
கரைகளெனும்
இருவரிகள் கொண்ட
அழகிய பூமித் தாளில்
இயற்கை மகள் எழுதும்
நளினப் புதுக்கவிதைகள்
நதிகள்.
/
எங்கள் வீட்டிற்கு
வண்ணத்துப் பூச்சிகள்
கூட்டமாய் வந்து
விட்டுப் போன பின்புதான்
தோட்டத்து பூக்களுக்கு
வண்ணம் வந்ததாகவும்
அதைக்
கண்கூடாகக் கண்டதாகவும்
எல்லோரிடத்திலும்
சொல்லி மகிழ்கிறாள் மகள்.
/
எதையும்
தீர்மானிக்கின்ற பக்குவம்
எனக்கு
அமையப் பெறவில்லை.

வாழ்க்கை அனுபவங்களில்
இன்னும்
நான் நிறைய அடிபட வேண்டும்.
/
எதற்கும்
உன்னிடத்தில்
முன்கூட்டியே
சொல்லி வைக்கிறேன்.
என்னைப் பற்றி
புறங்கூற வருவான்
எதையும் நம்பாதே!
/
எனது முடிவு இதுதான்
என் தெரிந்து வைத்திருக்கிறாய்
என்றால்,
என்னை நன்கு புரிந்து
வைத்திருக்கிறாய்
என்று "அர்த்தம்".
/
ஆடவர் வாழ் குடிலில்
விளக்கேற்ற மெழுகுவத்தியே
பிரதானம்.
/
நாளெல்லாம் தேடியும்
அகப்படவில்லை.
ஆகாயத்தின் அஸ்திவாரம் ...!
/
இரை தேடும் இரவுப்பறவை;
கூரிய அலகால் கொத்துகிறது
நீரில் தெரியும் பிம்பப் பிறையை...!
/
நிரம்பி வழிகிறது
தகுந்த இடத்தில்
விழுந்த ஒற்றைத் துளி.
/
தேனருந்தும் வண்டின் காதலை
நிஜமென்று நம்பியிருக்கும்
பூக்கள்.
/
விளையாடும் பிள்ளைகள்
வழக்கம்போல்
தியானத்தில் புத்தர்சிலை.
/
எத்திசையில்
பார்த்தும் தெரியவில்லை.
அந்த நான்காவது சிங்கம்.
/
தொலைந்தவரை தேடும் களத்தில்
ஒவ்வொருவராய் தொலைய
காணாமல் போனது போராட்டம்.
/
யுத்தமில்லா பூமி கேட்டவன்
தனக்கோர் இடம் கொள்கிறான்
யுத்தத்தோடு...!
/
என்னைத் தொலைத்தவளே
தேடுகிறாள்; காதலில்
உச்சகட்ட பைத்தியநிலை.

- கவிதைகள் ஆக்கம்
பாரியன்பன்
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353



# பறவை நீரருந்த

நீர்ப்பரப்பில் உண்டாகிறது
முத்தமிடும் காதல் சோடிகள்

மாலைச் சூரியன்
மொட்டைப் பனையின்பின் அமர
வண்ண வண்ண ஓலைகள்

சன்னலின் வழியே
கரையும் காகம்
பறந்து போனது பசி

தேர்தல் நாள்
எனக்காக பிரச்சாரம்
பாட்டோடு குயில்

அந்தி சாயும் வேளை
மீனவன் இழுக்கும் வலையில்
சிக்கி மீளும் சூரியன்

மனிதர்கள் பேசாவிட்டாலென்ன
மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறான்
நாய்களோடு பேசும் பித்தன்

--

சா.கா.பாரதி ராஜா

---




**கொரோனா விழிப்புணர்வு**

**ஓவியம்:**
**சிவசூர்யா**


# பிறந்து வா என் மகனே

நீ பிறந்து வா என்னிடம்
புது உலகமாய் எனக்கென
புது உலகம் நீ காண
கண்களை திறந்து வியந்தபடி
என்னுளிருந்து பிறந்து வா மகனே
என் தசைகளின் வலி நீ அழகாவாய்
என் நரம்புகளின் தழும்பில் நீ
அழகாவாய்!
பத்து மாத கணமதிலே நீ அழகாவாய்
என் மகனாவாய் என் கனவே!
எனக்கென கணம் வயிற்றினில் நீயாக
அவரோ மனதினில் உனக்கென
பெரும் சுமை தாங்க ஏங்கி தவிக்க
நித்தம் உனக்காக நிமிடமும் அழகாக
உன் சத்தம் கேட்க
என் முத்தங்களே முதல் பரிசு
பிரபஞ்சம் இதில் நீ தனித்துவமாய்
துணிந்திருக்க
தைரியமாய் தலைநிமிர்த்தி வெளியே
வா
உன் தந்தையின் சொல்லுக்கு
அசைவுகளில் பதில் சொல்லி விட்டு
தாவிக்குதிக்கையில்
என்னை நீ மறவாதே
என் பெரும் வரமே
உனக்கென்ன வரம் வேண்டுமோ
தங்கையா ? தம்பியா ?

–

**கனிமொழி சீனிவாசன்**

**ச.மிதுன்பாலா,**
**மூன்றாம் வகுப்பு,**
**வேலம்மாள் பள்ளி**



# பொழிலில் உதிரும் சருகுகள்

நீங்க முடியாத
நினைவுகளோடு
நித்தம் நித்தம் பேசி
உறவாடும் தென்றலே....
என் உருக்கமான
பதிக்கு பதிலொன்று சொல்!

தாங்க இயலாத
பெருந்துயர் வாட்டிடுதே
தூங்க முடியலையே
மானுடம் படுந்துயர்
தீரலையே....

நோய்கள் தாக்கிடுதே
வாழ்வில்
சோகம் நிறைந்திடுதே
வாய்மை தோற்கிறதே
தேசம் மாறும் சூழ்நிலையில்....

இறைவா பாரய்யா
இறக்கிறது பார்"அய்யா"
நோய் மறைந்து போய் விடுமோ
மரணம் உலகை தின்றிடுமோ!

பொழிலில் உதிரும் சருகுகளாய்
மானுடம் இறந்து போகிறது
கருணை கண்ணால்
பார் இறைவா
கவலை துன்பம் தீரய்யா....

மரணமே வா
என்னை உண்டுவிட்டுப்
போ.....

–

இளங்கவி,
நடுநாட்டுத்தமிழன்,
குடியநல்லூர் கிராமம்,
வேங்கை வாடி அஞ்சல்,
கள்ளக்குறிச்சி வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்
606 206

# மதுபான கடைகள்

வலிகள் நிறைந்த
தருணங்கள்தான்
இது...!

இருந்தாலும்
சொல்லாமல்
இருக்க முடியாது...!

இப்போதுதான்
மயானங்களுக்கூட-
மயானமைதி கிடைத்திருக்கிறது...!

"மதுபான கடைகள்மூடப்பட்டதால்"

மூடப்பட்ட கதவுகளை
நிரந்தரமாக்கினால் - இங்கு
பலரது வாழ்க்கையில்
அமைதி திரும்பும்....!

அ.செல்வராஜ்.
க.நா.ஊர்,
உடுமலை.

# கடற்கரை

காற்றாடும்போதினிலே
கடற்கரைமீதினிலே....!
முகவரியற்றுசிரித்திடும்
கால்சுவடு மணல்மீதினிலே...!

மணல்வீடுகளில்புகும் மழலையின்
கிரகப்பிரவேஷங்கள்
அலங்கரிக்கின்றன
கைவிரல் அச்சுகளோடு...

கடலலைகள் எழுதும்
கடுதாசியில்
கரைகளும் காதலிக்கிறது
அலைதொடும்போதெல்லாம்...

பூட்டப்படாத கரைமீது
பூக்களின்சுவாசங்கள்
எழுதிச்செல்கின்றன
புனிதமான காதலை...

பிரிக்கப்பட்டகாதலும்
கரை ஒதுங்குகின்றன
கைகோர்த்த வண்ணம்
கடல்சாட்சியாக...!

முத்தமிட முத்தமிட
அலைகளும்நீந்துகின்றன
காதலை தேடி
கரையோரமாய்...

கரையோரம்முளைத்த
ஆயிரம்ஜன்னல்கள்
மனம்திறக்கின்றன
காற்றுவீசட்டுமென்று...!

மனம்தொலைத்த
மன்னவர்களும்
எழுதுகின்றனர்மணல்மீது
விருப்பமானபெயரை.....

கரைமீதுவிழுந்த
மனங்கள்பேசுகிறது
அலையே எம்மை
அழித்துவிடாதே
என்று....!

அலையெழும்போதெல்லாம்
கரைமட்டும்விழித்திருக்கும்
அலைதொடுகையிலே
கரையும் நீர் சுரக்கும்

கரையெழுதும்வார்த்தையில்
அலையும்கற்கிறது
காதலைமட்டுமல்ல
கனவாய் கரையும்
வாழ்க்கையையும்....

–

ஞா.முனிராஜ்,
அருப்புக்கோட்டை

# உணர்வுகள்

எனது இரண்டு வெவ்வேறு
கவிதைகளுக்கு இடையிலோ

ஒரே கவிதையின் வெவ்வேறு
வரிகளுக்கு இடையிலோ

ஒரே வரியின் வெவ்வேறு
சொற்களுக்கு இடையிலோ

ஒரே சொல்லின் வெவ்வேறு
எழுத்துக்கள் இடையலோ

எங்கோ ஓரிடத்தில்
எப்போதோ ஓர் நொடியில்

என்னையோ எனதன்பையோ
மனதின் ஆழத்தில்
மறைந்திருக்கும் உணர்வையோ
உணரக்கூடும் நீங்கள்


அந்த உணர்வுகளின் சங்கமம்
ஒருமுறை நிகழ்ந்துவிட்டால்
ஒவ்வொரு முறையும்
சங்கமிக்கும் வெகு இயல்பாய்.

என்றோ ஒருநாள் நான்
எழுதுவதை நிறுத்தலாம்.
என்னுள் எழுவதை
நிறுத்தவும் முடியுமோ?

அவ்வேளைகளில் என்னுள்ளே
எழுகின்ற கவிதைகள்
உங்கள் காதுகளுக்குள் எப்பொழுதும்
கேட்டபடி இருக்கும்.

–

பா.சுதாகர்,
சென்னை.
*8610102044*



ஓவியம்:
T. ஷாலினி,
ஜெயங்கொண்டம்

# அன்பின் பூக்கள்

அன்பில் வளர்ந்த அல்லிப் பூவே
அனுதினம் சூடிகொள்ள மனம்
ஏங்குதே
கிள்ளி பறித்திட துணிந்த
கைகள்
ஒரு கனம் நின்று
தவிக்குதே......!!!!!

***


கவிதை எழுத தொடங்கும்
முன்னமே
எழுத்துக்களில் சிம்மாசனமிட்டு
அமர்ந்து விடுகிறது
நின்னினைவுகள்....!!!!

***

எனை கடந்து செல்லும் பேருந்து
உன் நினைவை ஒருகனம்
என்னுள் விதைத்து செல்கிறது
எங்கே நீயென்று ....!!!
நேசித்தே கிடத்தல் என்பதும்
ஒருவித சாபமே.....!!!

–

ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்.
8867933021



**நிரோசா ஸ்டாலின்,**
7 ஆம் வகுப்பு,
கூப்பாச்சிக்கோட்டை.

# ஓவியம்

அன்னையின் முகமே
மழலையின் அழகோவியம்...!!!!

ஆதவனின் தோற்றமும்
மறைவும் ஓர்
ஆகாயத்தின் ஓவியம்...!!!

இறைவன் படைப்பில்
இயற்கை இனிமையோவியம்...!!!!

ஈரமண்ணில் பதிந்த
கால்சுவடுகள்
கலை ஓவியம்...!!!!

உழவனின் உழைப்பில்
துளிர்த்த நெல்மணிகள்
உயிரோவியம்...!!!!

ஊக்கம் தந்து
வழிகாட்டிய ஆசான்
உணர்வோவியம்...!!!

எறும்பு ஊர கல்லும்
தேய்கிறதாம் அது
எழிலோவியம்...!!!

ஏழ்மையிலும் புன்னகை
மறவாத மனிதன்
எளிமையோவியம்...!!!

ஐம்புலன்களும் இயற்கை படைப்பில்
அருமையோவியம்...!!!

ஒளிகளில் மறையும்
நம் நிழலும் நிரந்தர
ஓவியம்...!!!!

ஓவியம் அறிய மழலையின் முதல்
கிறுக்கல்கள் ஓயாத
!!!! ஓவியம்!!!!



–
ச.அருள் பிரசாத்,
B.Com, CMA, MDA DTL
(GST practitioner)
சிராங்குடி.





நிரஞ்சனா கபிலன்,
மான்கோட்டை நத்தம்,
மன்னார்குடி.

# மகனே மானிடா !

கருவுற்ற தாயைப்போல் கனித்த
தந்தநேரம்
பெரும்பேறினைப் பெற்றதால்
கண்ணின் ஓரமீரம்
அருஞ்சிறப்புற்ற எம் சூரிய
குடும்பத்தில்
முதன்முறையாக என்னுள் தரித்த
உயிர்கள்.

கண்ணும் கருத்துமாய் காடுமலை
காற்றும்
மண்ணும் புனலனலும் கனிமமும்
கமழிபடலமும்
விண்ணும் வியத்தகு பற்பல
வண்ணங்களும்
கொண்டு எம்முயிர்களுக்காக
கொடுத்தேன் சீர்கள்.

நுண்ணுயிர்களாக தோன்றிபல
இன்னுயிர்களாக நிறைந்தன
வளங்களால் வளர்ந்தும் அவற்றை
வளர்த்தும் செழித்தன
மயில்களாக ஆட்டமிட்டும் குயில்களாக
பாட்டிசைத்தும்
ஒவ்வொன்றும் தனித்திறமையால்
விழாக்கோலம் பூண்டன.

நூற்றாண்டு பலகடந்து தோன்றினான்
மாயவன்
பெற்றப் பிள்ளைகளிலே
பெருந்திறன்கொண்ட மானிடன்
இன்புற்றேன் அவன் வளர்ச்சி
வேகங்கண்டு
கனாக்கண்டேன் நம் நிலையை
உயர்த்துவானென்று

மாறாக நிகழ்ந்ததோ தீராத ஆசைதான்
போறாத காலந்தான் அல்லவையை
அள்ளிக்குவித்தான்
மரங்களுக்கிடையே தேடித் துயில்
கொண்டவன்
அம்மரங்களையே அழித்து
அரண்மனைகள் பல கட்டிக் குவித்தான்

பிரபஞ்ச இருள்கண்டு மருளுவான்
எண்ணெண்ணி
நித்தமும் நீலப்போர்வை,
அவ்வப்போது
வான்வண்ணந்தீட்டிப்
பயனென்ன! என்னுளழித்த வளங்கள்
போதாதென
விண்ணுள் பாய்ந்து வியாபாரம்
செய்கிறான்

ஆயிரம்தான் ஆனாலும்நீ
என்பிள்ளை தானடா!!!
ஆனாலுன் ஆடம்பரத்தால் பிற
உயிர்களை வதைப்பதேனடா!!!
என்னகம் படிப்போரே
எம்மானிடமகவைக் கண்டால்
கூறுங்கள்
ஆகச்சிறந்த அன்பும்
அக்கறையும் வாழ்வில்
முக்கியமென்று!!!

- பாரதி

# மனிதா நீ எங்கே

போய் கொண்டு இருக்கிறாய்!

ஊருக்கெல்லாம்
ஊரடங்கு உனக்கு
மட்டும் இல்லையா..

தலைக்கவசத்தைத்தான்
தலைக்கணத்தால் அணியவில்லை
முககவசத்தையாவது முகமலர்ந்து
அணிவாயா.

அரசாங்கமோ ஆணை
பிறப்பிக்கிறது அரை மணிக்கு
ஒருமுறை
ஆனால் நீயோ மீறுகிறாய்
ஒருமணிக்கு ஒருமுறை
கூட்டமோ மண்றாடுகிறது

மளிகை கடையிலும்
மாமிச கடையிலும்
பாவம் அரசாங்கமோ
திண்டாடுகிறது

இதுகாறும் இறப்புகளோ
இரட்டிப்பாகின்றன

இறுதிச்சடங்குகளோ
சப்தமின்றி இரைகின்றன

இதையெல்லாம் தாண்டியும்
விதிகளை மீறியும்
நீ எங்கே போய் கொண்டு
இருக்கிறாய்.

ஓ
உன் மரணத்தை தேடி
என்றால் எதிர்ப்பதற்கு.

எவருக்கும் ஏன்
அந்த எமனுக்கும்
எண்ணமில்லை...

–

## தர்ஷினி நாகூரான்

# துளிப்பாக்கள்

பாலைவனத்தில் நடக்கிறேன்
குளிர்ச்சியாக உள்ளது
காயும் நிலா

புத்தரை வரைகிறேன்
தியானத்தில் மூழ்கிவிடுகிறது
மனம்

ஒவ்வொரு நாளும்
கவிதை நூலாகிறது
முகநூல்

ஆற்றுப்படுத்துகின்றன
ஒவ்வொரு எறும்புகளையும்
எதிர் வரும் எறும்புகள்



--
## பெ. விஜயலட்சுமி
காஞ்சிபுரம்

# விளம்பரங்கள் விதைக்கும் வினைகள்



நேசமுடன் ஈசு

ஈரடியில் முக்காலமளந்த "ஐயன் திருவள்ளுவர்" குறிப்பிடும் வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமை இலாத சொலல்* எனும் முத்தான குறளுக்கு முழுவதும் எதிரானதாக இருப்பதே இன்றைய விளம்பரங்கள்.

விளம்பரங்கள் என்பது நாம் நினைப்பது போல தொலைக்காட்சி நிகழ்ச்சியில் நம்மிடம் உள்ள ரிமோட் கண்ட்ரோல் மூலம் கடந்து போவதல்ல.. நம் நாட்டில்.. ஊரில்.. நம் வீட்டில்.. நம் அனுமதி இல்லாமலே நிறைந்திருப்பது விளம்பரங்களே.

வில்லியம் சேக்ஸ்பியர் கூற்றுப்படி "உலகம் இன்னும் பொய்யெனும் ஆபரணத்தால் ஏமாற்றப்படுகிறது" என்கிறார். நம் மூளையை சலவை செய்து  நாம் எதை வாங்க வேண்டும்? எதை வாங்க கூடாது? எது தேவை? எது தேவையில்லை? என விளம்பரங்களே முடிவு செய்கின்றன!. இதை "கிராமத்தில் ஒரு சொலவடை சொல்வார்கள் பொய்ய பொருந்த சொன்னா  நிஜம் நின்றுகொண்டு முழிக்கும்" என்று.

விளம்பரங்களின் சாத்தியம் சொல்ல ஒரு உதாரணம் போதுமானதாக இருக்கலாம். புகைப் பழக்கம் ஆரம்பத்தில் வேண்டத்தகாத வெறுக்கத்தக்க விஷயமாகவே இருந்தது. புகை பிடிக்கும் போது ஏற்படும் இருமல் நாற்றம் மற்றும் சுற்றியுள்ள நட்புகளின் வெறுப்பு குடும்பத்தில் உள்ளவர்களின் வெறுப்பு என அதன் முகம் கோரமாக இருந்தது அவமானமாக இருந்தது.

ஆனால் அதை விளம்பரங்கள் "எவ்வாறு சாத்தியமாக்கியது" என்றால் அந்த மக்கள் புகைப்பிடிப்பது ஆண்மையின் அடையாளம் என்றும் வீரத்தின் விளை நிலம் என்றும் வெற்றியின் ரகசியம் என்றும் பெண்கள் விரும்பும் பொக்கிஷம் என்றும் அடிக்கடி விளம்பரங்களில் இடம் பெறச் செய்து கொண்டே இருந்ததனால் நாளடைவில் புகைபிடிக்கச் செய்தார்கள்.

அந்த புகைபிடிக்கும் பழக்கத்தை எந்தளவு கொண்டு சென்றார்கள் என்றால்.. சிகரெட் பாக்கெட்டின் அட்டைப் படத்தில் உள்ள ஒரு படம் சாதாரண ஒரு மனிதர் பார்த்தால் அவருக்கு  வாந்தி வந்துவிடும் அந்த அளவுக்கு அருவருப்பான புகைப்படத்தை பார்த்து கொண்டும் அதை சகித்துக் கொண்டும் புகை பிடிக்கிறார்கள் என்றால்... இப்போது புரிந்திருக்கும் விளம்பரங்களின் சக்தியும் சாத்தியமும் என்னவென்று. "ஒரு விஷயத்தை தொடர்ந்து செய்தால் அது பழக்கமாகிறது ஒரு விளம்பரத்தில் தொடர்ந்து பார்த்தால் அது வழக்கமாகிறது பின் வாழ்க்கையாகிறது". ஒரு சுவாரசியமான சம்பவம்

*ஒரு குறிப்பிட்ட புகை பிடிப்பவர் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடுத்திருந்தார் புகைப்பிடிக்கும் நிறுவனத்தின் மீது புகைப்பான் பற்றிய விளம்பரம் அனைத்தும் பொய் சொல்லி விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள் என்று. புகைப்பான் நிறுவனத்தின் வழக்கறிஞர் வாதாடியது உண்மை என்று வாதாடினார். விடயம் என்னவெனில்*

*1. முதலாவது புகைப்பிடித்தால் திருடன் வீட்டுக்கு வரமாட்டான்.*
*2. பெண் குழந்தை பிறக்காது.*
*3. முதுமை வராது இவ்வாறு சொல்லி அந்த புகைப்பான் கம்பெனி விளம்பரம் செய்திருந்தது என்றுதான் வழக்கு பதியப்பட்டுள்ளது. வாதாடிய வழக்கறிஞர் எவ்வளவு தந்திரமாக இதை கையாண்டார் என்றால்*

*1. முதலாவது கேள்விக்கு பதில் புகைப்பிடிக்கும் போது அவனுக்கு இருமல் காசநோய் போன்றவை வரும் இருமிக் கொண்டே இருப்பதால் இரவில் உறங்க மாட்டான் அவன் உறங்காமல் இருப்பதால் திருடன் வீட்டுக்கு வரமாட்டான். ஆதலால் முதலில் நாங்கள் கூறியது சரியே.*

*2. இரண்டாவது பெண் குழந்தை பிறக்காது என்று கூறி இருந்தோம். உண்மையே புகைப்பழக்கம் இருப்பவனுக்கு ஆண்மை குறைவால் குழந்தையே பிறக்காது இதில் பெண்குழந்தை எங்கே பிறப்பது?*

*3. மூன்றாவது முதுமையே வராது என்றோம் ஆம் அவன் இளமையிலே இறந்து விடுவான் ஆதலால் புகைப்பிடிப்பவர்களுக்கு முதுமை வராது என்றார்.*

*இன்றைய விளம்பரங்கள் மக்கள் மனதில் விதைப்பது என்ன? உப்பும் கறியும் வேப்பங்குச்சியும் கொண்டு பல் துலக்கி கொண்டிருந்தவர்களை இந்த விளம்பரங்கள் மாற்றி பேஸ்ட் என்பதை வழக்கத்தில் கொண்டு வந்துவிட்டு இப்போது உங்க பேஸ்ட்ல உப்பு இருக்கா? என்று கேட்பதில் என்ன நியாயம்? அரப்பு போட்டுக் குளித்து தேங்காய் எண்ணெய் தேய்த்துக் கொண்டு இருந்தவர்களை சாம்பு போட்டு குளித்தால் முடி வளரும் என்று சொல்லி அனைத்து முடியும் கொட்டிய பிறகு இப்பொழுது அமேசான் காடுகளில் உள்ள எண்ணெய்யை தேயுங்கள் என்கிறார்கள்.*

*அங்கு உள்ளவர்களே அரையின்ஞ்ச் முடியோடு தான் இருக்கிறார்கள் என்பதை கூட மறைத்து. இன்றைக்கு நாகரீகம் என்ற பெயரில் கிழிந்த துணிகளை தைத்து நாகரிகமாக வாழ்ந்தவர்களை புது துணிகளை கூட கிழித்து போடுவது நாகரீகம் என்று வளர்க்கிறார்கள். ஒரு விளம்பரம் நகையை வாங்குங்கள் என்கிறது. மற்றொரு விளம்பரம் அடமானம் வையுங்கள் என்று.வேறொரு விளம்பரம் அடமானம் வைத்த நகையை எங்களிடம் விற்று விடுங்கள் என்கின்றது. இவர்கள் இறுதியில் என்னதான் சொல்ல வருகிறார்கள். மனித குணம் உதவி செய்வதே ஆனால் இப்போது ஒரு*

விளம்பரத்தில் நல்ல வேலை நீ எதுவுமே செய்யவில்லை என்கிறார்கள்.

உச்சகட்ட வேதனையாக நாட்டையே கேலியாக்கி மூடநம்பிக்கைக்கு சிகரம் தொடுவதாக இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றியானது வீரர்களின் திறமையால் அல்லவாம் சாதாரண மனிதன் சும்மா உட்காருவதால் என்பது எவ்வளவு பெரிய மூடத்தனம். இவ்வாறு இந்த விளம்பரங்கள் விதைக்கும் வினைகள் நல்ல பண்புகளை நசுக்குவதாகவும் பிற்போக்கு சிந்தனைகளுக்கு உரமிடுவதாகவும் உள்ளது. என்றாலும் விளம்பரங்களை அடியோடு வெறுத்து விடுவதற்கில்லை ஒரு சில நல்ல வரம் வழங்கும் நல்ல விளம்பரங்களும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக சில.. ஏன் உண்டியலை உடைச்ச இந்த ஒரு விளம்பரத்தில் மகன் தாயின் மீது வைத்த பாசம் தெரிகிறது.

மகிழுந்தின் சக்கரத்தை மாற்றும் ஒரு விளம்பரத்தில் அப்பாவை பார்த்தேன் என்ற ஒற்றைச் சொல்லில் அப்பாவினுடைய உழைப்பு தெரிகிறது. பெண்களுக்கு பாலியல் தொல்லைகள் அதிகரிக்கும் இந்த பொழுதினில் இப்பொழுது ஒரு விளம்பரத்தில் இப்போது நீ தனியா போக ரெடி என்று ஒரு பெண்ணை போர்வாளாக மாற்றி சமுதாயத்துக்கு அனுப்புவது சிறப்பு. சக மனிதர்கள் மீது மனிதநேயத்தை காட்டும் ஒரு விளம்பரத்தில் சுடுநீரில் குளிப்பது சிறந்தது என்கிறார்கள் மற்றொரு தேநீர் விளம்பரத்தில் திருநங்கையர் பற்றிய ஒரு சிறப்பு பார்வையை செலுத்தி இருக்கிறார்கள்.

நல்ல விளம்பரங்களும் ஒன்றிரண்டு அவ்வப்போது இருக்கத்தான் செய்கிறது. ஒரு விளம்பரத்தில் கறை நல்லது என்று இந்த சமுதாயத்தின் ஆசிரியர்களைப் பற்றி உயர்வாக பேசுகிறது. இவ்வாறு இருக்கின்ற விளம்பரங்கள் ஒரு சிலவே. தமிழர்கள் எழுத்துப்பிழையையே சகித்துகொள்ளாதவர்கள் இந்த எண்ணப்பிழைகளை என்ன செய்வதென்பது  நமது நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் மத்திய மாநில அரசுகள் கரங்களில் உள்ளது. இதை சாதாரணமாக கடந்தால் மக்கள் ஆறாத ரணங்களில் அல்லலுறுவார்கள் என்பதில் ஐயமில்லை ஆதலால் இந்த விளம்பரங்களிலும் கவனம் செலுத்த வேண்டும். விளம்பரங்களில் உண்மையும் நேர்மையும் தமிழர்களின் பண்பாடு கலாச்சாரமும் கட்டாயம் பின்பற்ற வேண்டும். விளம்பரங்கள் விதைக்கும் வினைகளை அல்லவைகளை அகற்றி நல்லவைகளை நிலைத்திருக்க செய்ய வேண்டும்.

– சமூக அக்கறையுடன்,

நேசமுடன் ஈசு (ஆசிரியர்)
அலைபேசி: 9080628870

# இறைவனுடன்

எப்போதும் பேசிக்கொண்டிருக்கும்
குழந்தைகளின் குரலில் இப்பொழுது
சோகம்,
உணவில்லாததற்கா
உறவுகள் இல்லாததற்காக
உடைகள் இல்லாததற்காக,
எதுவென யூகிக்க முடியவில்லை,
இதற்கு முன்பு பேசிய எல்லா
வார்த்தைகளுக்கும் அர்த்தம்
கண்டவன் இப்போது தடுமாறுகிறான்,
எல்லாமறிந்து
தராத வரங்களுக்கா
இப்போது மட்டும்
கேட்காத செவிகளுக்கா,
இறைவனுக்கு மட்டுமே
வெளிச்சம்,
இருளில் வாழ்பவர்களின் வேதனை!

**

## மரணமடைந்தவர்களை

பார்த்துப்போனால்
நல்லது நடக்குமென சொன்னவனை,
எரித்துக்கொண்டிருக்கிறது....
தந்தையை இழந்தவளின் கண்கள்!

***

நாம் இறுதியாய் சந்தித்த
பின்னொரு நாளில்,
நம் பிரிவுக்கான காரணங்களை
குறுஞ்செய்தியில் அனுப்பிவிட்டு,
நீ சாதித்த மௌனம் இன்னுமென்னை
சிதைத்துக் கொண்டேயிருக்கிறது...
இறந்தவனின் மீது ஏறிச்செல்லும்
கனரக வாகனங்களாய்,
இப்போது நீ எங்கு
எப்படியிருப்பாயென என்ற
ஒற்றைத் தேடலில்
ஒட்டிக்கொண்டிருக்கிறது...
நீ விட்டுப் போன காதலின் மிச்சம்!

**

## நேசித்த மனிதரின்

உடலை
கடைசியாய் ஒரு முறை
பார்த்துக்கோங்க
என்ற ஒற்றைச் சொல்
கலைத்து போடுகிறது...
வாழ்தலுக்கான
இறுதி நம்பிக்கையை!

**

## வெற்றிக்காக ஓடிக்

கொண்டிருக்கின்றன
சில கால்கள்,
பெற்ற வெற்றியினை
தக்க வைத்துக்கொள்ள
ஓடிக் கொண்டிருக்கின்றன
சில கால்கள்,
தன் பசி தீர்க்க
ஓடிக்கொண்டிருக்கின்றன
சில கால்கள்,
பிறர் பசி தீர்க்க
ஓடிக் கொண்டிருக்கின்றன
சில கால்கள்,
ஓயும் வரை ஓடிக்
கொண்டேயிருக்கின்றன

ஒவ்வொரு கால்களும்
காலத்தினை முந்த முடியாமல்!

***

## வைக்கோலை தந்தவன்
பாலாய் கேட்கிறான்
மரத்தை வளர்த்தவன்
கனியாய் கேட்கிறான்
செடியை வளர்த்தவன்
பூக்களாய் கேட்கிறான்...
செய்த உதவிகளுக்கெல்லாம்
பிரதிபலன் எதிர்பார்த்தே
இயங்குகிறது இவ்வுலகம்...
உன்
வயதான பாட்டிக்கு உதவி
செய்வதைப் போல் வீட்டு வாசல் வரை
வந்து
உன் ஒற்றைக் கண்ணசைவிற்காய்
காத்திருக்கும்
என்னைப் போல!

***

## இருபதாவது முறை
அழுத்தப்படும்
பற்பசையில் ஒட்டியிருக்கிறது...
அழுத்துபவனின் வறுமை!

**

## நேற்று பெய்த மழையின்
மிச்சம்
இன்னுமிருக்கிறது...
குடிசையை தொலைத்தவனின்
கண்களில்!

**

## காத்திருத்தலைப் பற்றிய
கவிதையொன்றை
எழுத
காத்திருக்க
வேண்டியதாகயிருக்கிறது...
நீ என்னோடு இல்லாத நாட்களில்!

**

## பசிக்கிறதென ஒரு வாய்
சோறு கேட்டவனை
உதாசினப்படுத்திய மனது
விரைந்தோடிக்கொண்டிருக்கிறது...
கேட்காதவன் கேட்டு விட்ட
விலை உயர்ந்த
மதுபாட்டிலினை வாங்க!

- மு.முபாரக்



# துளிப்பாக்கள்

சிகப்பு விளக்கு எரிந்ததும்
வேகமாக தரையிறங்குகிறது காகம்
இரையை கொத்திச் செல்ல

அசைக்கும் காற்று
ஒவ்வொரு கிளையின் நுனியிலும்
பூவாய் மலர்கிறது நிலா

மூங்கில் கொம்பின் வழியே
மழைநீர் இறங்க
கொட்டுகிறது இசை

நான் கிணற்றில் பார்க்க
வானத்தைப் பார்க்கிறது
விழுந்த பிம்பம்

கடக்கும் ரயில் வண்டி
கடைசிப் பெட்டி விட்டுச் செல்கிறது
பேரமைதியை

தொடங்கியது மழை
வேகமாக நிரப்புகிறது
குடை விற்பவனின் சட்டப்பை

மழை நிற்கத் தொடங்கியதும்
குடையோடு வானைப் பார்க்கிறது
சிறுமியின் முகமும்

- சா. கா. பாரதி ராஜா,
செங்கல்பட்டு.
9944315732








N.S.**சாய்ருத்ரா,**
வடுவூர்,
தென்பாதி

# மனதுடன் சில நிமிடங்கள்...

மனமே!!

இவ்வுலகில் எதுவும் நிலையானது
இல்லை.. தன் நம்பிக்கையை
விட...

சூழ்நிலைகள் மாறக்கூடும்..
தடங்கல்கள் தடம் அறியா தாழ்ந்து
போகும்...

இந்த சூழ் நிலையும் நமக்கானதே
என்று உணர்..
நாம் பக்குவ படுவதற்கு...

காரணம் காரியம் இன்றி எதுவும்
இல்லை உணர்....

புறம் தள்ளு பகைமையை அகமை
கொண்டு..

வீறு கொண்டு எழு.. நீ சுயம்
என்பதை உன் சுயம் கொண்டு
உணரு..

காலங்கள் மாறும் காட்சிகள் மாறும்
...

எதிர் கொள்ள துணி...

அனுபவத்தை விட ஆயத்தம்
முக்கியம் என்பதை உணர்..

வாய்ப்புகள் வாயிற் கதவில் அல்ல
மனகதவில்..
ஆம் நம் மன கதவில்...

புறந்தல்லு கடந்தனவற்றை..
பூசண்டு கொடு
வருங்காலத்திர்க்கு....

பாரதி வழி வந்தவர் நாம் என்பதை
மறவாதே...

நான் இருக்கின்றேன் நீ
கலங்காதே....
சூழ்நிலைகளை எதிர் கொள்ள
பக்குவம் ஆகு..

வாழ்க்கை பல விசித்திரங்கள்
நிறைந்தது.. அனுபவித்து
வாழ்வோம் வா..

வசந்தத்தை எதிர்நோக்கி...

–

கவிபாரதி. சதிஷ்
விருதை.

# எதற்கிந்த தினமோ ???



பஞ்சபூதமிங்கு பலவாராய்
நகைக்கிறது
எதற்கிந்த சுற்றுச்சூழல் தினமென்று !!!

காற்றோடு கலந்த கழிவெல்லாம்
கனத்துப் போகிறது இன்றும் !
ஆற்றோடும் அகழியோடும்
அசுத்தமாய் அலைகிறதெங்கள்
அழுக்காறான தொழிற்சாலை கழிவுகள் !
காடெல்லாம் ஒலிக்கிறதெங்கள்
கடைசி ஓலம், கட்டிப் பிடித்தழக் காற்றும் தீ நுண்மியில் !
கட்டிடங்கள் கழுத்தை நெறிக்கிறது,
குழிகள் எங்களைப் புதைக்கிறது !
கலவையாய் நீ ஊற்றிய கழிவுகள் கைதட்டி அழைக்கிறதெங்கள் கடைசி ஊர்வலத்திற்கு!

தொலைந்த தாயைத் தேடிய மரக்கன்றொன்று மறுதலிக்க முடியாமல் அறுபட்டு வீழ்ந்த இடம் பார்த்து அதிர்கிறது!
மாயமான சிட்டுக்குருவியின் கருசிதைவு ஓலங்களைக் கேட்க கீழ்செறிவு அதிர்வெண் இல்லை உங்களிடம் !!!
மிச்சமான காற்றுமிங்கு மீளாத்துயரில் மிதக்கிறது,.
தீ நுண்மிகள் தீண்டியே
தீர்ந்தும் போகுமோ?
மரமொன்று வைக்காத மாக்களே,.
மண்ணோடு உனக்கென்ன வன்மமே?
தினமொன்று ஏனுனக்கு?
திருந்திப் பார்க்க மடுத்தபின்!
தினம் கூட விளம்பரம் தான்,
திரும்ப நீ நீரூற்றும் வரை !!!

– கவிமலர் த. சரண்யா,
பாலக்காடு மாவட்டம்
கேரளா.

# சுமைத் தாங்கி "ஆட்டோ"

அலாரம் அடித்த நேரம் அதிகாலை 3.30.கண்ணன் விர்ரென்று எழுந்து லுங்கியை மடித்துக் கட்டிக் கொண்டுச் சுமைத் தூக்கும் பணிக்குப் புறப்பட்டான் தன் குடும்பச் சுமையை இறக்கி வைக்க........

குழந்தைகள் இருவரும் தூங்கி எழுவதற்குள் தன் பங்கிற்கு நடந்தே கீரைக் கட்டுகளை அந்த பகுதி முழுவதும் விற்று விட்டு வந்து திண்ணையில் அமர்ந்தவளிடம்.....

இந்தா கோகிலா..... இன்றைக்குக் கிடைத்தக் கூலி. வண்டிக்கு டீசலுக்கு மட்டும் பணம் கொடு.சவாரிக்கு நேரமாச்சு என்றான் கண்ணன்

சரி..சரி... சீக்கிரம் புறப்படுங்க. நான்காவது வீதியில கடைசிவீட்டுல அந்தம்மாவுக்கு ஒரே மூச்சுத் திணறலாம். ஆட்டோ கேட்டாங்க என்றாள் கோகிலா

ஓ... அப்படியா ? இதோ போறேன் என்று விரைந்தான் கண்ணன்

மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் ஆக்ஸிஜனின்றி பரிதாபமாக இறந்தார் அந்த மூதாட்டி.

மீளாத்துயரத்தில் ஆழ்ந்த கண்ணனுக்கு ஆட்டோவில் ஆக்ஸிஜன் பொருத்தும் எண்ணம் எழுந்தது....

அடுத்த நாள் தனது பத்து வயது மகனுக்கு மிதிவண்டி வாங்க சேமித்து வைத்திருந்த பணத்தைக் கொண்டு ஆட்டோவில் உயிர் காக்கும் ஆக்ஸிஜன் கருவியைப் பொருத்தினான்.
கடந்த இருபது நாட்களில் கிட்டத்தட்ட எழுபது பேர்களை எவ்வித கட்டணமுமின்றி தன் ஆட்டோவில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று உயிரைக் காப்பாற்றி இருக்கின்றான் கண்ணன்.

ஒரு மாதம் கழித்துச் சிகிச்சை முடிந்து வீடு திரும்பியவர்கள் ஒவ்வொருவரும் அவனுக்கு நன்றி கூறும் போது தான் தெரிந்தது எந்த கட்டணமும் வாங்காமல் ஆட்டோ ஓட்டும் கண்ணன் சுமைத் தூக்கும் வேலைச் செய்வதுக் குறித்து....

நீ ஆட்டோ ஓட்டும் டிரைவர் மட்டுமல்ல - எங்கள் ஆயுளைக் கூட்டித் தந்த தெய்வம் என்று கண்ணனுக்கு நன்றி கூறியவர்களுக்கு மேலும் ஒரு ஆச்சர்யம்....

"பிரசவத்திற்கு இலவசம் " என்ற வாசகத்துடன் "ஆக்ஸிஜனுக்கு இலவசம் " என்று ஆட்டோ பின்புறம் எழுதியிருப்பதைக் கண்டுக் கண்ணனை வாழ்த்தி வணங்கினர்.

அச்சமயத்தில் ... என்னப்பா... ஆட்டோ....
எம்.ஜி. காலனி வருமா?
என்றான் ஒருவன்

இனிமேல் "ஆட்டோ"ன்னு
மதிப்புக் குறைவா கூப்பிடாதே
O2 ன்னு அன்பா கூப்பிடு...
என்றார் கூட்டத்தில் இருந்த முதியவர் ஒருவர்.

மனித நேயம் வாழ்கின்றது சில நல்ல உள்ளங்களில் .

- மு.ஜெரோஷா,
திருப்பூர்.
9791680266

---



## என் கள்வன் !!

கண்ணா!!
கன்னிகையின் காதல் கல்வனே!!
கவரும் உன் பேச்சும்!!
நவரசம் பாடும் உன் விரல்களும்!!
வீழ்த்தியதடா என்னை!!
அந்நாள்!!
நவமணி மாலையில் இருக்கும்!!
முத்துகளாய் சிதறினேன்!!
சித்தறித்து தந்திருக்கிறேன் !!
சிறு முத்து ஒன்றை!!

பா.எழிலரசி பாலசுப்பிரமணியம் சாந்தி,
அ.வீரையா வாண்டையார் நினைவு திரு புட்பம் கல்லூரி,
மூன்றாம் ஆண்டு,
புவியியல் துறை.

## வீரம் விளைந்த

மண்ணில் பிறந்தவனே
விழிகள் எதிரே
கொடுமைகள் நடந்திட
விலகிப் போக
நினைப்பது சரியா...?
வீறுகொண்டதைத் தடுத்திடு
தமிழா சிங்கமாக...!

தாய்ப் பாலைக்
குடித்து வளர்ந்தவனே
தாரகையைக் கயவர்
களங்கப் படுத்திட
தனக்கெதற்கு வம்பென்று
ஒதுங்குவது முறையா...?
தாக்கியவரைச் சிதைத்திடு
தமிழா சிறுத்தையாக...!

வண்டமிழை உயிராய்
நேசித்து வாழ்பவனே
வஞ்சகர் நம்பண்பாட்டைப்
பழித்துப் பேசிட
வாயை மூடிக்கொண்டு
இருப்பது நியாயமா...?
வார்த்தையால் அடித்திடு
தமிழா வேங்கையாக...!

அருந்தமிழ் வரலாற்றை
மறைக்க முயன்றிட
அந்நிய சக்திகள்
திட்டம் தீட்டிட
அமைதியாக நாளும்
பயணிப்பது தர்மமா...?

ஆவேசமாய்ப் பொங்கிடு
தமிழா புலியாக...!

- பாக்யபாரதி, தருமபுரி.

## பட்டாம்பூச்சி

பட்டாம்பூச்சிக்கு சிறகு முளைத்தது!

விண்ணில் பறக்க ஆசை கொண்டது!

விண்மீன்களையும் எட்டிபிடிக்கும்
துணிச்சல் கொண்டது!

ஒற்றை பார்வையில் எதிரில் நிற்க்கும்
எவரையும் அதிசியிக்க செய்தது!

சிரிப்பொளியில் பூமிபந்தையே ஒரு
கணம் நிற்க செய்தது!

பயம் என்பதை அறியாத குழந்தை
பருவம் தான் அது!

எவருக்கும் அடிபனியாத தன்மை
கொண்டது!

என்னை சிறுபிள்ளையாய் பார்த்த
ஞாபகம் வந்தது!

சிட்டாய் பறக்கும் பட்டாம்பூச்சியின்
'அம்மா' எனும் அமுத மொழியால்
அர்த்தமானது என் பிறப்பும்..

வாழ்த்துங்களேன்
வளர்கிறோம்!..........."

இப்படிக்கு
ரம்யா வினோத்குமார்,
உள்ளிக்கோட்டை.

# வீறு கொண்டு எழு மனமே

காடுகளை அழித்து வீடுகளை
கட்டினாய்...
மலைகளை குடைந்து மாளிகை
ஆக்கினாய்...
விளை நிலமெல்லாம் வீணாகிற்றே !
மழை வளம் எல்லாம் மண்ணாகிற்றே !
உனக்கு இன்னும் புரியலையா ?

காற்றையும் மாசாக்கினாய்...
குடிநீரையும் விளைக்கு வாங்கினாய்...
இயற்கையை விலைபேசி விற்று
நோயை இலவசமாக வாங்கினாயே
அப்போதும் புரியலையா ?

ஆளுக்கொரு தனியறை அமைத்து
ஆடம்பரமாக வாழ நினைத்தாய்...
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்ற
வார்த்தையையும் மெய்யாக்கினாய்...
என்ன குடும்பத்தோடு வாழ சொன்னால்
கொரனாவுடன் கூடி வாழ்கிறாய் !
இன்னும் எதுவும் விளங்கலையா ?

மனிதம் மறத்து மாண்டு போனது !
வாழ்கை இருளில் கரைந்து போனது !
உண்ண உணவு மட்டும் வேண்டும்
அதை விளைவிக்கும் விவசாயம்
மாண்டு போகனும் ?

நிலத்தை அழித்து சாலை
அமைத்தாயே
அதில் பணத்தை அறுவடை செய்து
உண்பாயோ?
மானங்கெட்ட மனமே இப்பொழுதாவது
புரிகிறதா ?

குற்றங்கள் நிகழும்போது கூக்குரல்
இட்டால் மட்டும் போதாது
குற்றங்கள் நிகழும்போது அதை
தட்டிக்கேட்க !
சாதனைகள் பல புரிந்து நீ சரித்திரம்
படைத்திட !
நாளைய நாளேடுகளில் நீ
நாயகனாக வலம் வர
வீறு கொண்டு எழு மனமே !
வீறு கொண்டு எழு.

–

அட்சயா விஜயன்,
தஞ்சாவூர்





# கோடை

கோடைச் சூரியன் உமிழ்ந்த
ஒட்டுமொத்த வெயிலையும்
வெக்கையாய்க் கீழிறக்கிக்கொண்டிருக்கிறது
ஓட்டு வீடு.
தூங்க முடியாமல்
முதுகு நனைந்து படுத்துக்கிடக்கையில்
எப்படியோ வந்து தொலைத்தது ஆசை.
“கடைசியா பங்குனி உத்திரத்து அன்னைக்கு...
பத்து நாள் ஆச்சு”

மெதுவாகத் தொட்டுத் திருப்பிய விரல்களுக்கு
கிளர்ச்சிவயப்பட்டு
மெதுவாக மேலேறிப் படர்ந்தபோது
‘சொத்தென’ முதுகில் விழுந்தது ஏதோவொன்று.
பதறியபடி உதறி எழுந்து பார்த்தபோது
‘சின்னவ’ தலைமாட்டில் கிடந்தது
செந்தேள்க் குஞ்சொன்று.

‘பெரியவ’ எழுந்து “அம்மா தண்ணீ” ன்னா
தேள் எடுத்துப் போட்டு
நீர் எடுத்துக் கொடுத்து
பாய் திரும்பி
விட்டம் பார்த்துக்கிடந்தோம்
ரகசியமாய்ப் புன்னகைத்தாள்
வெக்கையும், வேட்கையும்,
விரக்தியும் ஏமாற்றமும் கசிய.

மொத்தமாய்க் கலைந்துவிட்டது
இனி மேகங் கூட எத்தனை நாளாகுமோ?
இந்தக் கொடுங் கோடையில்.

- செவல்குளம் செல்வராசு

"இல்லாமை"
என் பிள்ளைகள்
கேட்பதையெல்லாம்
நான் தான் வாங்கித்தர
வேண்டுமென்று நினைக்கிறேன்!
ஆனால் இடையில்
யார் யாரோ சிலவற்றை
வாங்கி கொடுத்து விடுகிறார்கள்...
என் உழைப்பின் மேல்
இருக்கும் நம்பிக்கையை
இழக்கும் விதமாக..!

"நூலகம்"
பல
பழைய
புத்தகங்கள்
ஒன்றிணைந்த
நூலகம்
"முதியோர் இல்லங்கள்"..!

"வசூல்"
அப்பா
வாங்கிய வரதட்சனை!
வட்டியோடு திருப்பி
கொடுக்கப்பட்டது
மகளுக்கு..!

"அடங்கல்"
மிக அழகான
பெண்மையும்
அடங்கிப்போய் விடுகிறது...
அழகற்ற
ஒரு ஆண்மையிடம்..!

"கண்ணீர்"
பிள்ளைகளை
அடித்த இரவுகளை விட
அடிக்காத இரவுகளே
தூக்கமற்றவை..!



"அறியாமை"
அந்த மலை உச்சிக்கல்
இன்னும் சுமந்து
கொண்டேயிருக்கிறது!
நமது பெயருடன்
காதல் அம்பு குறியிட்டு
இருவரும் பொறித்த
நம் காதலின் சின்னத்தை...
நாம் பிரிந்தது
தெரியாமல்..!

"இல்லை"
ஒரு நாளும் வருத்தப்படவே
இல்லை அந்த சன்னல்!
தினம் தினம் தன்னருகே
அமர்ந்து வெளியுலகை
ஏக்கத்தில் பார்க்கும்
அந்த முதிர்கன்னிக்காக..!

"காலம்"
யாருக்காகவோ
எதையோ
எதிர் பார்த்துதான்
காத்திருக்க வைக்கிறது
எப்போதும்
காலம்..!

"கேள்வி"
ஓய்வு
எப்பொழுது..?
பறவைகளுக்கு..!

- மகிழை. சிவகார்த்தி

# இரவில்

பகல்வேண்டித்
தியானிக்கிறேன்
படுத்த நிலையில்
என் வேண்டுதல்
அதிகாலையில்
நிறைவேறியது.

மழைத்தடி கொண்டு
பூமியை அளக்கிறது
வானம்.

நீண்ட வானத்திற்கு
ஒரு முழக் கதம்பம்
வானவில்.

பூமிக்கு வந்த மழைநீர்
ஆவியாக மாறுவேடம் பூண்டு
செல்கிறது வானஉலா.

தினமும் எங்கள் ஊருக்கு
காலையில் வந்து
மாலையில் செல்கிறது
சூரியன்.

கவிதை எழுதி விட்டு
கருத்தை வாசகனிடம்
விட்டுச் செல்கிறேன்.



ஆனந்தன்,
திருப்பூர்.

# பேரிருள்



என்னிடம் பேசி நிறைய
ஒன்றுமில்லையா உன்னிடம்
என்பதற்கு....
நிறைய இருக்கிறதென்று
வாய்த்திறப்பதில்லை எதுவும் நீ
பெருங்கடல்முன்
நீர்க்காக்கையைப்போல்
காத்திருக்கிறேன்
தொடர்ந்தெழும்பும் பேரலைகளால்
தூரத்தில் மாயங்கள் செய்கிறாய்
சில்லென்று நனைத்து மகிழ்த்த
ஒருபோதும் கரையை
நெருங்குவதில்லை
ஏமாற்றங்களோடே
கூடு திரும்புகிறேன் இன்றும்
பிசாசுகளை எழுப்பிவிட்டுப்
பசியோடு எதிர்நிற்கிறது
நிலவும் துணைக்கில்லா
அம்மாவாசை பேரிருள்!

# இதயமீன்

வசீகரத்தின்
சகல ஏற்பாடுகளோடும்
ம்மென்று எதிரில் அமர்ந்து
வைத்தக்கண் வாங்காமல்
தூண்டில் போடுகிறாய்
தாமதம் ஏதுமின்றி
வேண்டுமென்றே சிக்கிக்கொண்டது
என் மௌன நதியின்
இதயமீன்?

- பொன்.தெய்வா,
ஐவேலி, விழுப்புரம் மாவட்டம்.

பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
டணாணாணீ://ட்ச்டிணணாடச்ணூடுச்டூ.ட்ச்ணணச்டி.டிண

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில்).

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு.

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்.

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது.

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு.

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்.

சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்

பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்.

நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி.

குழாய் பதிக்கும் பணி.

விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு.

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு.

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி


+91 8220567322

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal

Thiravukolmagazine